மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 21 ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்கள் இருக்கின்றன. 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் ஏறக்குறைய 157 இடங்களில் சொந்தக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. சொந்தக் கட்டடம் இல்லாத வாடகைக் இடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கிற விற்பனை மையங்களுக்கு மாண்புமிகு அம்மாவுடைய அரசு உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 325, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

325—

ஸ்கேன் வசதி

***43912—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளுக்கும் ஸ்கேன் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி வினாக்களுக்கான விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 15 மகப்பேறு மருத்துவமனைகளில், 9 மகப்பேறு

2014 ஆகஸ்ட் 4]

மருத்துவமனைகளில் ஸ்கேன் மையங்கள் இயங்கி வருகின்றன. மதுரை மாநகராட்சியில் சுகாதார இயக்ககம் விரிவுபடுத்தப்படும்போது மீதமுள்ள மகப்பேறு மருத்துவமனைகளில் ஸ்கேன் மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட மகப்பேறு மருத்துவமனைகள் 17, நல வாழ்வு மையங்கள் 17, அலோபதி மருத்துவமனைகள் 12, சித்தா மற்றும் ஆயுர்வேதம், என மொத்தம் 46 மருத்துவமனைகள் செயல்படுகின்றன. இதிலே மாநகராட்சியிலே புதிதாக இணைக்கப்பட்ட பகுதிக்கு இன்னமும் ஒப்படைப்புப் பணிகள் நடைபெறவில்லை. பொதுவாக அரசு மருத்துவமனை மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில்தான் சுகப் பிரசவம், மனித நேயத்தோடு சுகப் பிரசவமாக நடைபெறுகிறது. இத்தகைய சூழ்நிலையில் மகப்பேறு மருத்துவமனைகள் 17-ல் 7 மருத்துவமனைகளுக்கு ஸ்கேன் வசதி இல்லை. சி.டி. ஸ்கேன் என்பது 17-லும் இல்லை. லேப் வசதி என்பது 12 மருத்துவமனைகளிலும் இல்லாத நிலை நீடிக்கிறது. அறுவை சிகிச்சை என்பது எந்தப் பிரிவிலும் இல்லை. மதுரையிலே தினசரி கிட்டத்தட்ட 2,300 பேர் இந்த மகப்பேறு மருத்துவமனைக்கு வந்து செல்கிறார்கள். தடுப்பூசி போடக்கூடிய நாட்களில் 6 ஆயிரம் பேர் வந்து செல்கிறார்கள். எனவே மகப்பேறு மருத்துவமனைக்கு இன்றைக்கு மதுரை மாநகராட்சியிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுப்பானடியில் உள்ள மகப்பேறு மருத்துவமனைக்கு ஸ்கேன் வசதி செய்ய வேண்டும் என்று சொல்லி 9 மாதங்கள் ஆகியும் இன்று வரையிலும் அது அமல்படுத்தப்படவில்லை.*

அதேபோல, என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மதுரை மாநகராட்சி மருத்துவமனைக்கு 8 இலட்சம் ரூபாய் சோலார் லைட்டுக்கு ஒதுக்கப்பட்டது. அதேபோல காசநோய்ப் பிரிவிற்கு X-Ray Plant-*க்கு 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அது* Lab Technician *இல்லாத காரணத்தினால் 2 ஆண்டுகளாக இன்று*

வரையிலும் இயங்காத நிலையில் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாக மதுரை மாநகராட்சியினுடைய அந்த மகப்பேறு மருத்துவமனையினுடைய மேம்பாட்டுக்கு லேப் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மதுரை மாநகராட்சியின் மக்கள்தொகை 12 இலட்சத்து 30 ஆயிரத்து 15 ஆகும். மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 15 மகப்பேறு மருத்துவமனைகளில் கர்ப்பிணிப் பெண்களின் நலன் கருதி 9 மகப்பேறு மருத்துவமனைகளில் ஸ்கேன் வசதி செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. ஒரு மாதத்திற்கு தோராயமாக 1,500 கர்ப்பிணிப் பெண்களுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்யப்படுகின்றது. இதர மாநகராட்சி மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சை மேற்கொள்ளும் கர்ப்பிணிப் பெண்கள் மேற்கூறிய 9 மகப்பேறு மருத்துவமனைகளில் ஸ்கேன் பரிசோதனை செய்துகொள்ளலாம். மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பல்வேறு உள்ளாட்சிகள் அடங்கிய 28 வார்டுகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனைகளில் ஜூன் மாதத்தில் மட்டும் 217 மகப்பேறு நடைபெற்றுள்ளது. ஸ்கேன் மையங்கள் உள்ள மகப்பேறு மருத்துவமனைகளில் சராசரியாக 120 கர்ப்பிணிப் பெண்களுக்கும், ஸ்கேன் வசதி இல்லாத மகப்பேறு மருத்துவமனைகளில் சராசரியாக 97 கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு நடைபெறுகிறது. சுகாதார இயக்கம் மதுரை மாநகராட்சிக்கு விரிவாக்கம் செய்யப்படும்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல் அங்கு ஆட்கள் குறைவு என்று சொன்னார்கள், அதனையும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கு என்னென்ன வசதிகள் தேவையோ அந்த வசதிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி மருத்துவமனையில் 15 டாக்டர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். 13 செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர் பணியிடங்கள் 34 காலியாக இருக்கின்றன. சுகாதார ஊழியர்கள் அவ்வப்போது ஒப்பந்தத் தொழிலாளர் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள். இதனால் அங்கு வரக்கூடிய நோயாளிகளுக்கு மருத்துவம் பார்ப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட ஒட்டுமொத்த 46 மருத்துவமனைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி மருத்துவமனை மட்டுமல்ல சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றுமுள்ள 12 மாநகராட்சிகளிலும், 124 நகராட்சிகளில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் கிட்டத்தட்ட அனைத்துப் பகுதிகளிலும் 615 சுகாதார மையங்கள் மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகள் உள்ளன. அத்தனை மருத்துவமனைகளிலும் உள்ள நிலையினை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று

அப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகராட்சியில் 3 மகப்பேறு மருத்துவமனைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே 2 மகப்பேறு மருத்துவமனைகளில் ஸ்கேன் வசதி இல்லை. அத்துடன் தண்ணீர் வசதி இல்லாமலும், துப்புரவுப் பணியாளர்களும் சரிவர வராத சூழ்நிலையும் உள்ளது. எனவே, அங்குள்ள குறைகளைக் களைந்து, உடனடியாக அங்கு ஸ்கேன் மெஷின் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் குறைகளைத் துறை அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்து, அவர்கள் கூறியபடி அந்தக் குறைகள் இருந்தால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் உள்ள, மேலூர் நகராட்சி நிருவாகத்தின்கீழ் ஒரு மகப்பேறு மருத்துவமனை இயங்கிவருகிறது. அங்கு அப்பகுதியில் இருக்கக்கூடிய ஏழையெளிய பெண்களுக்கு வசதியாக சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு சுகப்பிரசவங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எனவே, அங்கு ஸ்கேன் மற்றும் கூடுதல் வசதியோடு அந்த மருத்துவமனை விரிவாக்கம்*

2014 ஆகஸ்ட் 4]

செய்துதரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மேலூர் பகுதி மருத்துவமனைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அந்தக் குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 326, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

326—

கால்நடை கிளை நிலையம்

***37071—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, திருக்காம்புலியூர் ஊராட்சி, மேட்டுத் திருக்காம்புலியூரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், திருக்காம்புலியூர் ஊராட்சி, மேட்டுத் திருக்காம்புலியூரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கக் கேட்டிருக்கிறார்கள்.